Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلّی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 7

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

18 ஜமாதியுல் அவ்வல் 1438 ஹிஜ்ரி கமரி 16 தப்லீக் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

16 பிப்ரவரி 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இந்த இயக்கத்தில் அப்துல் லத்தீஃப் ஷஹீது அவர்களைப் போன்ற உண்மையாளரை, இல்ஹாமை [இறை அறிவிப்பைப்] பெறுபவரை இறைவன் உருவாக்கியுள்ளான். அவர்கள் தமது உயிரைக் கூட இவ்வழியில் தியாகம் செய்து விட்டார்கள். இறைவனிடமிருந்து இல்ஹாமை பெற்று அவர்கள் என்னை உண்மைப்படுத்தினார்கள். அத்தகைய இயக்கத்தின் மீது ஆட்சேபனை செய்வது இறையச்சத்திற்கு உட்பட்ட விஷயமாக இருக்க முடியுமா? தூய இயல்பையுடைய நல்லவரான அறிஞர் ஒருவருக்கு ஒரு பொய்யனான மனிதன் மீது இந்த அளவு பேரன்புமிக்க உணர்வு எப்படி ஏற்பட முடியும்?**

**அப்துல் லத்தீஃப் ஷஹீது மர்ஹூம் அவர்கள் உண்மையாளராகவும் இறையச்சமுள்ள இறைவனின் அடியாராகவும் இருந்தார்கள். அவர்கள் இறைவனின் வழியில் தனது மனைவியையும் குழந்தைகளையும் தனது நேசத்திற்குரிய உயிரையும் பொருட்படுத்தவில்லை. இத்தகைய மக்களே உண்மையான ஆலிம்களாக இருக்கின்றனர். இவர்களது சொற்களும் செயல்களும் பின்பற்றத் தகுந்தவையாகும். இவர்கள் இறுதி வரை இறைவனின் வழியில் தங்களது உண்மையை நிறைவேற்றிக் காட்டி விட்டனர்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**17 –வது அடையாளம்** - இந்த நபர் உண்மையில் இருக்கின்றார்; வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் இருக்கின்றார் என்பது மவ்லவி சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீது அவர்களுக்கு கிடைத்திருக்கும் இல்ஹாம் ஆகும். அத்துடன் அவர்களுக்கு தொடர்ச்சியாக பல கனவுகளும் வந்திருந்தன. அவை, மவ்லவி சாஹிப் அவர்களுக்கு கொண்ட கொள்கையில் உறுதியாக நிலைத்திருக்கும் தன்மையை வழங்கியது. அதாவது, இறுதியில் அவர்கள் என்னை உண்மைப்படுத்துவதற்காக காபூல் (ஆஃப்கானிஸ்தான்) மண்ணில் காபூல் அமீரின் கட்டளையினால் தனது உயிரை அர்ப்பணித்து விட்டார்கள். இந்த நபரிடம் பைஅத் செய்வதை விட்டு விட்டால் முன்பை விட அதிகமாக உங்களுக்கு கண்ணியம் வழங்கப்படும் என்று பலமுறை அமீர், அவர்களிடம் கோரிக்கை வைத்தார். ஆனால், அவர்கள் ஈமானை விட உயிருக்கு முன்னுரிமை வழங்க என்னால் முடியாது என்று கூறினார்கள். இறுதியில் அவர்கள் இவ்வழியில் உயிரை தந்து விட்டார்கள். இவ்வழியில் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக உயிரை தருவதற்கு நான் விரும்புகின்றேன் என்று அவர்கள் கூறினார்கள். கற்களை எறிந்து அன்னார் ஷஹீதாக்கப்பட்டார்கள். கொண்ட கொள்கையில் எந்த அளவு அவர்கள் உறுதியாக நிலைத்திருந்தார்கள் என்றால் அவர்களது வாயிலிருந்து ஒரு பெருமூச்சு கூட வெளிவரவில்லை. நாற்பது நாட்கள் வரை அவர்களது சடலம் கற்களுக்கிடையே கிடந்தது. பிறகு அஹ்மது நூர் என்ற பெயரையுடைய அவர்களது சீடர் ஒருவர் அவர்களது சலடத்தை அடக்கம் செய்தார். அவர்களது கபரிலிருந்து (மண்ணறையிலிருந்து) இப்போது வரை கஸ்தூரியின் நறுமணம் வருகின்றது என்று கூறப்படுகின்றது. அவர்களது தலைமுடி ஒன்று இங்கு (காதியானிற்கு) அனுப்பி வைக்கப்பட்டது. அதிலிருந்து இப்போதுவரை கஸ்தூரியின் நறுமணம் வருகின்றது. நமது பைத்துத் துஆவின் ஒரு மூலையில் ஒரு கண்ணாடிக் குமிழில் அது வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்விஷயம் இட்டுக்கட்டி பொய் கூறுகின்ற ஒரு நபரது ஏமாற்று வேலையாக இருந்திருந்தால் பிறகு ஷஹீது மர்ஹூம் அவர்களுக்கு இவ்வளவு தொலைவில் அவர்கள் இருந்தும் கூட எனது உண்மை தொடர்பாக ஏன் இல்ஹாம் வந்தது ? இது பற்றி தொடர்ச்சியாக அவர்களுக்கு கனவுகள் ஏன் வந்தன ? அவர்கள் எனது பெயரைக் கூட அறியாதவர்களாக இருந்தார்கள். பஞ்சாபில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பிறந்து விட்டார் என்று இறைவன் மட்டுமே என்னைப் பற்றிய செய்தியை அவர்களுக்கு தெரிவித்தான். அப்போது அவர்கள் பஞ்சாப் பற்றிய செய்திகளை ஆராய ஆரம்பித்தார்கள். உண்மையிலேயே ஒரு நபர் பஞ்சாப் குர்தாஸ்பூர் மாவட்டத்திலுள்ள காதியானில் வாதம் புரிகின்றார் என்பது அவர்களுக்கு தெரிய வந்ததும் எல்லாவற்றையும் விட்டு விட்டு அவர்கள் என் பக்கம் ஓடி வந்தார்கள். ஏறக்குறைய இரண்டு மாதங்கள் இங்கு தங்கினார்கள். பிறகு அவர்கள் திரும்பிச் செல்லும்போது தீங்கு விளைவிக்கும் ஒற்றர்கள் அவர்களைப் பற்றிய செய்தியைத் தெரிவித்ததன் காரணமாக அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் கைது செய்யப்பட்ட பிறகு உங்களது மனைவியையும் பிள்ளைகளையும் சந்தியுங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டபோது இப்போது அவர்களை சந்திக்க வேண்டிய தேவை எனக்கில்லை. நான் அவர்களை இறைவனிடம் ஒப்படைக்கின்றேன் என்று அவர்கள் கூறினார்கள். நீங்கள் கல்லெறிந்து கொல்லப்படுவீர்கள் என்ற கட்டளை அவர்களுக்கு கூறப்பட்டபோது நான் நாற்பது நாட்களுக்கும் அதிகமாக மரணித்தவனாக இருக்க மாட்டேன் என்று அவர்கள் கூறினார்கள். நம்பிக்கை கொண்டவர் மரணித்த சில நாட்களுக்குப் பிறகு அல்லது அதிக பட்சமாக நாற்பது நாட்களுக்குள் உயிர்ப்பிக்கப்படுகின்றார். மேலும் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுகின்றார் என்று இறைவனின் வேதங்களில் எழுதப்பட்டதையே சுட்டிக் காட்டக் கூடியதாக இந்த சம்பவம் இருந்தது. ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ரஃபஅ (உயர்த்துதல்) தொடர்பாக இப்போது வரை நமக்கும் நமது எதிரிகளுக்கும் இடையில் இருந்து வருகின்ற அதே சண்டை தான் இது. நாம் அல்லாஹ்வின் வேதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு ஏற்ப அவர்கள் ஆன்மீகமாக உயர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்பவர்களாக இருக்கின்றோம். அவர்கள் அல்லாஹ்வின் வேதத்திற்கு எதிராக இறைவனின் قُلْ سُبْحَانَ رَبِّيْ هَلْ كُنْتُ إِلَّا بَشَرًا رَّسُوْلًا நீர் கூறுவீராக! என் இறைவன் தூய்மையானவன். நான் ஒரு மனிதனாகிய தூதரேயன்றி வேறு அல்லன் (17:94) என்ற கட்டளையை தமது கால்களுக்குக் கீழ் வைத்து விட்டு (ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் உடலளவில் உயர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். இவர் தஜ்ஜால் ஆவார். ஏனென்றால், முப்பது தஜ்ஜால்கள் வருவர் என்று எழுதப்பட்டுள்ளது என்று என்னைப் பற்றி இவர்கள் கூறுகின்றனர். முப்பது தஜ்ஜால்கள் வருவார்கள் என்றால் பிறகு அந்தக் கணக்கின் அடிப்படையில் ஒவ்வொரு தஜ்ஜாலையும் எதிர்த்து நிற்கும் வகையில் முப்பது மஸீஹ்களும் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. முப்பது தஜ்ஜால்கள் வந்து விட்டனர். ஆனால், ஒரு மஸீஹ் கூட வரவில்லை என்பது எவ்வளவு வினோதமானதாக இருக்கின்றது ? இந்த சமுதாயம் எந்த அளவு துர்பாக்கியமுள்ள சமுதாயமாக இருக்கின்றது ? அதன் பங்கில் தஜ்ஜால்களின் வருகைதான் இருக்கின்றது. உண்மையான மஸீஹின்

(தொடர்ச்சி 7-வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

சிலர் மார்க்கம் மற்றும் மதம் அவர்களது சுதந்திரத்தைப் பறிக்கின்றது; அவர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்றது என்று கருதுகின்றனர். ஆனால், அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: அதாவது, இஸ்லாமிய மார்க்கம் உங்களுக்காக இறக்கப்பட்டுள்ளது. இதில் உங்களை கஷ்டத்தில் ஆழ்த்தக்கூடிய எந்தக் கட்டளையும் இல்லை. மாறாக, சின்னஞ்சிறு கட்டளையிலிருந்து பெரிய பெரிய கட்டளைகள் வரை ஒவ்வொரு கட்டளையும் இறைவனின் கருணையையும் அருளையும் பெறக் காரணமாகவே இருக்கிறது.

சில விஷயங்கள் வெளிப்படையில் சிறியவையாகத் தோன்றுகின்றன. ஆனால், காலம் செல்லச் செல்ல அவற்றை சாதாரணமாக கருதியதன் காரணமாக அவற்றின் விளைவு மிகவும் அபாயகரமான வடிவத்தைப் பெற்று விடுகிறது. எனவே, நம்பிக்கை கொண்ட ஒருவர் ஒருபோதும் எந்தக் கட்டளையையும் சிறியதாகக் கருதக் கூடாது.

நாம் மார்க்கத்தில் நிலை நிற்க வேண்டும் என்றால் பிறகு நாம் மார்க்க போதனைகளையும் செயல்படுத்த வேண்டும். நாம் முஸ்லிம்கள் என்றும், மார்க்கத்தில் நிலை நிற்பதாகவும் அறிவிக்க வேண்டும். பிறகு இந்தக் கட்டுப்பாடுகளும் அவசியமாகும். அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களுடைய கருத்தின்படி செயல்படுவதும் அவசியமானதாகும். 'வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே, வெட்கத்தை வெளிப்படுத்தக்கூடிய ஆடை மற்றும் பர்தாவை அணிவது நமது ஈமானைக் காப்பாற்றுவதற்கு அவசியமாகும்.

ஒவ்வோர் அஹ்மதி பையன்களும் பெண்களும் ஒவ்வொரு இளைஞர்களும் இளவயது பெண்களும் வெட்கத்தின் தரத்தை உயர்த்தியவாறு சமூகத்தின் அசுத்தத்திலிருந்து தப்பிக்க முயற்சி செய்ய வேண்டும். அதற்கு மாற்றமாக தாழ்வு மனப்பான்மையால் ஏன் பர்தா அணிவது அவசியம்? நாம் நெருக்கமான ஜீன்ஸ் மற்றும் பிளவுஸ் ஏன் அணியக் கூடாது? என்று அவர்கள் கேள்வி கேட்கக் கூடாது. பெற்றோர் - குறிப்பாக தாய்மார்களின் பணி என்னவென்றால், சிறு வயதிலேயே பிள்ளைகளுக்கு இஸ்லாமிய போதனை மற்றும் சமுதாயத்தின் தீமையைப் பற்றி கூறுங்கள். அப்போதுதான் நமது சந்ததிகள் மார்க்கத்தில் நிலை நிற்க முடியும். பெயர் தாங்கி முன்னேற்றம் பெற்ற நாடுகளின் விஷத்திலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும். இந்த நாடுகளில் இருந்து கொண்டு பெற்றோர்களுக்கு பிள்ளைகளை மார்க்கத்துடன் இணைப்பது, வெட்கத்தைப் பாதுகாப்பது ஆகியவற்றிற்காக பெரும் ஜிஹாது செய்ய வேண்டிய தேவை உள்ளது. அதற்காக அவர்கள் தமது முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.

**வெட்கத்தை மேற்கொள்ள வெட்கத்தை வெளிப்படுத்தும் ஆடை அவசியமாகும். பர்தாவை பேணுவதில் இப்போது இருந்து வரும் வழிமுறை வெட்கத்தை வெளிப்படுத்தும் ஆடையின் ஓர் அங்கமாகும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.**

இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகள் கடுமையாக அழுத்தம் தருகின்றன. அதாவது, மார்க்கப் போதனைகளை மற்றும் மரபுகளை முஸ்லிம்களுக்குள் இருந்தே ஒழித்து விட வேண்டும் என்று அவை நினைக்கின்றன. இந்த சக்திகள் ஒரு முயற்சியைச் செய்கின்றன. மார்க்கத்தை கருத்து சுதந்திரம் என்ற பெயரில் ஒழித்து விட வேண்டும். அதுவும் பலவந்தமாக மார்க்கத்தை நாம் ஒழிக்கிறோம் என்று நம்மீது எந்தப் பழியும் வராத அளவுக்கு அதனை செய்ய வேண்டும். இவர்கள் அனுதாபத்துடன் நடந்து கொள்பவர்கள் என்று பிறர் கருத வேண்டும் என்று இவர்கள் நினைக்கிறார்கள்.

இக்காலத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சியின் பணி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திடம் ஒப்படைக்கப் -பட்டுள்ளது. இதற்காக நாம் முழுமையான முயற்சி செய்ய வேண்டியது வரும். சிரமப்பட வேண்டியது வரும். நாம் சண்டையிட வேண்டாம். ஆனால், ஞானத்துடன் இம்மக்களுடன் நடந்து கொள்ள வேண்டும். இன்று நமது மார்க்கத்துடன் தொடர்புடைய விஷயத்தில் இவர்களின் ஒரு கருத்தை நாம் ஏற்றுக் கொண்டோம் என்றால் பிறகு சிறிது சிறிதாக நமது நிறைய கருத்துக்களில், நிறைய போதனைகளில் இவர்கள் கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டே செல்வர். நாம் துஆக்கள் செய்வதில் அழுத்தம் காட்ட வேண்டும். அல்லாஹ் இந்த ஷய்த்தானிய தந்திரங்களை எதிர்கொள்ள நமக்கு தைரியமும் வாய்ப்பும் வழங்குவானாக! மேலும் நமக்கு உதவியும் செய்வானாக! நாம் உண்மையின் மீது நிலை நின்றால் - நிச்சயமாக நாம் உண்மையின் மீது நிலைநிற்கிறோம் - நிச்சயமாக நமக்கு ஒருநாள் வெற்றியும் உறுதியானது.

இக்காலம் மிகவும் ஆபத்தான காலமாகும். ஷய்த்தான் எல்லா தரப்பிலிருந்தும் ஆவேசமான தாக்குதலைத் தொடுக்கின்றான். அஹ்மதிகளாகிய நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். குறிப்பாக முஸ்லிம்கள் அதுவும் குறிப்பாக அஹ்மதி முஸ்லிம்கள் ஆண்கள், பெண்கள் அனைவரும் மார்க்க நிலைப்பாட்டை நிலைநாட்ட முயற்சி செய்யாவிட்டால் நம்மை பாதுகாப்பதற்கு எந்த உத்திரவாதமும் நம்மிடம் இல்லை.

இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கு அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் கட்டளையிட்ட ஒவ்வொன்றும் மிகவும் அவசியமாகும். பர்தாவின் கண்டிப்பான சட்டங்கள் பெண்களுக்கு மட்டுமல்ல. இஸ்லாமிய கட்டுப்பாடுகள் பெண்களுக்கு மட்டுமல்ல. மாறாக, அவை ஆண் பெண் இரு பிரிவினருக்கும் உரியதாகும். அல்லாஹ் முதலில் ஆண்களுக்கு வெட்கம் மற்றும் பர்தாவைப் பேணுவதன் வழிமுறையைக் கூறினான்.

பெண்களுக்கு ஆண்களுடன் சேர்ந்து Swimming செய்ய அனுமதி இல்லாதது போன்றே ஆண்களும் கூட பெண்களிடம் போய் அவர்களுடன் சேர்ந்து Swimming செய்ய அனுமதி இல்லை. ஆகவே இந்த கட்டுப்பாடுகள் எல்லாம் பெண்களுக்கு மட்டுமல்ல; ஆண்களுக்கும் ஆகும். ஆண்கள் தமது கண்களை கீழ் நோக்கி வைக்குமாறு கூறப்பட்டதிலிருந்து பெண்களின் கண்ணியம் நிலைநாட்டப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் ஒவ்வொரு கட்டளையும் ஞானம் நிறைந்தது. தீமைகளின் சாத்தியக்கூறை அது அகற்றுகிறது.

நான் முரப்பிகள் மற்றும் அவர்களது மனைவிகளிடம் கூறுவேன். அவர்களும் தமது ஆடைகள் மற்றும் பார்வையை எச்சரிக்கையாக வைக்க வேண்டும். அவர்களது முன்மாதிரியை ஜமாஅத் பார்க்கிறது. முரப்பி மற்றும் முபல்லிக்குகளின் மனைவியும் கூட முரப்பியாக இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு விவகாரத்திலும் உயரிய முன்மாதிரியைக் காண்பிக்க வேண்டும். நமது ஆண்களையும் பெண்களையும் வெட்கத்தின் உயர் தரத்தை நிலைநாட்டுபவராகவும், நம் அனைவரையும் இஸ்லாத்தின் கட்டளைகளை பேணுபவர்களாகவும் அல்லாஹ் ஆக்குவானாக!

பர்தா தொடர்பான இஸ்லாமிய போதனைகளை திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். பர்தாயின்மையால் ஏற்படும் இழப்புகளைப் பற்றி எடுத்துக் கூறியவாறு அஹ்மதி முஸ்லிம்கள் தமது பொறுப்புகளைப் புரிந்து அவற்றை நிறைவேற்றுமாறு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள்.

## சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 13 ஜனவரி 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **13 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

சிலர் மார்க்கம் மற்றும் மதம் அவர்களது சுதந்திரத்தைப் பறிக்கின்றது; அவர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்றது என்று கருதுகின்றனர். ஆனால், அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: وَمَا جَعَلَ عَلَيْكُمْ فِي الدِّيْنِ مِنْ حَرَجٍ அதாவது, மார்க்கத்தின் அம்சங்களுள் உங்களுக்கு கஷ்டம் தரக் கூடிய எதுவும் வைக்கப் –படவில்லை. (22:79) மாறாக, ஷரீஅத்துடைய நோக்கம் மனிதனுடைய சுமையைக் குறைப்பதாகும். அது மட்டும் அல்லாமல் எல்லா வகையான துன்பங்களிலிருந்தும் அவனை காப்பாற்றுவதுமாகும்.

எனவே, அல்லாஹ்வின் இந்தக் கூற்றில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாவது, இஸ்லாம் மார்க்கம் உங்களுக்காக இறக்கப்பட்டுள்ளது. இதில் உங்களை கஷ்டத்தில் ஆழ்த்தக்கூடிய எந்தக் கட்டளையும் இல்லை. மாறாக, சின்னஞ்சிறு கட்டளையிலிருந்து பெரிய பெரிய கட்டளைகள் வரை ஒவ்வொரு கட்டளையும் இறைவனின் கருணையையும் அருளையும் பெறக் காரணமாகவே இருக்கிறது. எனவே, மனிதனின் சிந்தனைதான் தவறாகும். அல்லாஹ்வின் வார்த்தை தவறாக இருக்க இயலாது.

அல்லாஹ்வின் படைப்பினமாக இருந்து கொண்டு அவனது கட்டளையின் படி நாம் நடக்கவில்லை என்றால், நாம் நமக்கு நஷ்டத்தை ஏற்படுத்திக் கொள்வோம். மனிதன் சிந்திக்கவில்லை என்றால் முதல் நாளிலேயே நான் மனிதனை வழிகெடுத்து அவனுக்கு நஷ்டம் விளைவிப்பேன் என்று உறுதி எடுத்துள்ள ஷய்த்தான் மனிதனை அழிவின் குழியில் தள்ளி விடுவான். எனவே, அவனது தாக்குதலிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றால் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்றுக் கொள்வது அவசியமாகும். சில விஷயங்கள் வெளிப்படையில் சிறியவையாகத் தோன்றுகின்றன. ஆனால், காலம் செல்லச் செல்ல அவற்றை சாதாரணமாக கருதியதன் காரணமாக அவற்றின் விளைவு மிகவும் அபாயகரமான வடிவத்தைப் பெற்று விடுகிறது. எனவே, நம்பிக்கை கொண்ட ஒருவர் ஒருபோதும் எந்தக் கட்டளையையும் சிறியதாகக் கருதக் கூடாது.

இக்காலத்தில் நாம் பார்க்கிறோம். உலகில் பெரும்பாலார் மார்க்கத்திலிருந்து விலகி தொலைவில் சென்று விட்டனர். எனவே, அவர்களின் நன்மை தீமையின் அளவுகோலும் கூட மாறிக் கொண்டே செல்கின்றது. உதாரணமாக இக்காலத்தில் நாம் பார்க்கிறோம். சுதந்திரம் அல்லது ஃபேஷன் என்ற பெயரில் ஆண்கள் மற்றும் பெண்களிடம் நிர்வாண நிலை பொதுவானதாக ஆகிக் கொண்டிருக்கிறது. முன்னேற்ற நிலையின் அடையாளம் பகிரங்கமாக வெட்கமற்று நடப்பதாகும் என்று கருதப்படுகின்றது. வெட்கம் என்பதே இல்லாமல் ஆகி விட்டது. இதன் தாக்கம் அவர்களுடன் இங்கு இருக்கின்ற நமது குழந்தைகளிடமும் வெளிப்படும் என்பது வெளிப்படையாகும். ஓரளவுக்கு வெளிப்பட்டும் உள்ளது. சில இளவயது பெண்கள் இளமைப் பருவத்தில் அடி எடுத்து வைக்கும்போது, இஸ்லாத்தில் ஏன் பர்தா அவசியமானதாக உள்ளது? நாங்கள் நெருக்கமான ஜீன்ஸ், பிளவுஸ் அணிந்தவாறு புர்கா இல்லாமல் அல்லது கோட் இல்லாமல் வெளியே ஏன் செல்லக் கூடாது? நாங்கள் இங்கு ஐரோப்பாவிலுள்ள சுதந்திரமான பெண்கள் போன்று ஏன் உடை அணியக் கூடாது? என்று எனக்கு எழுதுகிறார்கள்.

முதலில் நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், நாம் மார்க்கத்தில் நிலை நிற்க வேண்டும் என்றால் பிறகு நாம் மார்க்க போதனைகளையும் செயல்படுத்த வேண்டும். நாம் முஸ்லிம்கள் என்றும், மார்க்கத்தில் நிலைநிற்பதாகவும் அறிவிக்கிறோம் என்றால், பிறகு இந்தக் கட்டுப்பாடுகளும் அவசியமாகும். அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களுடைய கருத்தின்படி செயல்படுவதும் அவசியமானதாகும். 'வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஸஹீஹ் புகாரி கிதாபுல் ஈமான் பாபு உமூருல் ஈமான் ஹதீஸ் எண். 9) எனவே, வெட்கத்தை வெளிப்படுத்தக்கூடிய ஆடை மற்றும் பர்தாவை அணிவது நமது ஈமானைக் காப்பாற்றுவதற்கு அவசியமாகும். முன்னேற்றமடைந்த நாடுகள் சுதந்திரம் மற்றும் முன்னேற்றம் என்ற பெயரில் தமது வெட்கத்தை அழித்து விட்டனர் என்றால், அதற்கு காரணம் அவர்கள் மார்க்கத்தில் இருந்தும் கூட விலகி தொலைவில் சென்று விட்டனர்.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஓர் அஹ்மதி பெண் ஏற்றுக் கொண்டுள்ளார் என்றால், நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவேன் என்று அவர் ஓர் உடன்படிக்கை செய்துள்ளார். ஓர் அஹ்மதி பெண்ணோ ஆணோ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளார் என்றால், அவர் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதாக வாக்குறுதி அளித்துள்ளார். இந்த முன்னுரிமை வழங்குதல் என்பது மார்க்க போதனைக்கேற்ப செயல்படும்போதுதான் நடக்க முடியும். நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக விளக்கிக் கூறி விட்டார்கள் என்பது நமது நற்பாக்கியமாகும்.

இந்த வகையில் பர்தாயின்மை மற்றும் வெட்கமின்மை குறித்து அன்னார் ஓரிடத்தில் விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: ஐரோப்பாவைப் போன்று பர்தாயின்மைக்கு மக்கள் அழுத்தம் தருகிறார்கள். ஆனால், அது ஒருபோதும் உகந்ததல்ல. பெண்களுக்கு கிடைத்துள்ள இந்த சுதந்திரம் தான் பெண்களின் கட்டுப்படாமைக்கும் தீமைக்கும் வேர் ஆகும். எந்த நாடுகள் இந்த வகை சுதந்திரத்திற்கு அனுமதி கொடுத்து விட்டனவோ அவர்களின் நல்லொழுக்க நிலையை சற்று பார்வையிடுங்கள். இவர்களின் இந்த சுதந்திரம் மற்றும் பர்தாயின்மையால் இவர்களின் ஒழுக்கமும், தூய்மையும், கற்புடைமையும் அதிகமாகி இருந்தால் நாம் தவறில் இருப்பதாக ஒப்புக் கொள்வோம். ஆனால், ஆணும் பெண்ணும் இளம் வயதினராகவும் சுதந்திரமாகவும் பர்தா இல்லாமலும் இருந்தால் அவர்களின் தொடர்புகள் எந்த அளவுக்கு ஆபத்தானவையாக இருக்கும்.

தீய பார்வையை வீசுதல் மன எழுச்சிகளுக்கு பெரும்பாலும் அடிப்படையாகி விடுதல் மனிதனின் இயல்பான தன்மையாகும். பிறகு பர்தாவில் நடுநிலையைப் போணாத நிலையில் இருக்கும்போது அதனால் அவர்கள் கட்டுப்படாமைக்கும் தீமைக்கும் உட்படுவார்கள் என்றால், பிறகு சுதந்திரமாக இருந்தால் எதுதான் நடக்காது? ஆண்களின் நிலையை சற்று மதிப்பிட்டுப் பாருங்கள். எந்த அளவுக்கு கடிவாளமற்ற குதிரைகளைப் போன்று அவர்கள் ஆகி விட்டார்கள். இறைவனை பற்றிய அச்சமும் அவர்களுக்கு இல்லை. மறுமையைப் பற்றிய நிச்சய உறுதியும் அவர்களுக்கு இல்லை. உலக இன்பங்களை அவர்கள் தமது வணக்கத்திற்கு உரியவையாக ஆக்கி வைத்துள்ளனர். எனவே, எல்லாவற்றிற்கும் முதலில் தேவை இந்த ஆண்களின் சுதந்திரம் மற்றும் திரையின்மைக்கு முன்னதாக முதலில் ஆண்களின் நல்லொழுக்கத்தைச் சரி செய்யுங்கள். அது சரியாகி விட்டால் ஆண்களில் குறைந்தபட்சம் அவர்கள் தமது மனக் கிளர்ச்சிகளால் வெல்லப்படாத அளவுக்கு அவர்களிடம் ஆற்றல் உருவாகி விட்டால் பர்தா தேவையா? இல்லையா? என்ற இந்த விவாதத்தை அந்த சமயத்தில் சீண்டுங்கள்.

அது அல்லாமல் தற்போதைய சூழ்நிலையில் சுதந்திரம் மற்றும் திரையின்மைக்கு அழுத்தம் தருவது சிங்கத்தின் முன் ஆடுகளை வைப்பதாகும். இவர்களுக்கு என்ன ஆகி விட்டது? எந்த ஒரு செயலின் விளைவையும் இவர்கள் சிந்திப்பதில்லை. இவர்கள் குறைந்தபட்சம் தமது மனசாட்சியை பயன்படுத்தட்டும்! பெண்களை ஆண்களுக்கு முன்னால் திரையின்றி வைக்கும் அளவிற்கு ஆண்களின் நிலையில் அந்த அளவு சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டதபா? (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 134-135; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இக்கால சமூகத்தில் நமக்கு தென்படுகின்ற தீமைகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒவ்வொரு சொல்லையும் உண்மைப்படுத்துகின்றன. எனவே, ஒவ்வோர் அஹ்மதி இளைஞர்களும் இளவயது பெண்களும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் வெட்கத்தின் தரத்தை உயர்த்தியவாறு சமூகத்தின் அசுத்தத்திலிருந்து தப்பிக்க முயற்சி செய்ய வேண்டும். அதற்கு மாற்றமாக தாழ்வு மனப்பான்மையால் ஏன் பர்தா அணிவது அவசியம்? நாம் நெருக்கமான ஜீன்ஸ் மற்றும் பிளவுஸ் ஏன் அணியக் கூடாது? என்று அவர்கள் கேள்வி கேட்கக் கூடாது.

பெற்றோர் – குறிப்பாக தாய்மார்களின் பணி என்னவென்றால், சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு இஸ்லாமிய போதனை மற்றும் சமுதாயத்தின் தீமையைப் பற்றி கூறுங்கள். அப்போதுதான் நமது சந்ததிகள் மார்க்கத்தில் நிலை நிற்க முடியும். பெயர் தாங்கி முன்னேற்றம் பெற்ற நாடுகளின் விஷத்திலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும். இந்த நாடுகளில் இருந்து கொண்டு பெற்றோர்களுக்கு பிள்ளைகளை மார்க்கத்துடன் இணைப்பது, வெட்கத்தைப் பாதுகாப்பது ஆகியவற்றிற்காக பெரும் ஜிஹாது செய்ய வேண்டிய தேவை உள்ளது. அதற்காக அவர்கள் தமது முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.

அதுபோன்று கடந்த நாட்களில் ஒரு பெண் எனக்கு கடிதம் எழுதியுள்ளார்: நான் நன்கு படித்தவள். எனக்கு வங்கியில் நல்ல வேலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. நான் கேட்க விரும்புவது என்னவென்றால், நான் அங்கு துப்பட்டா அணியவோ, பர்தா அணியவோ கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டால், கோட் கூட அணிய இயலாது என்றால் நான் அந்தப் பணியைச் செய்யலாமா? பணி முடிந்து வெளியே வரும்போது திரையிட்டுக் கொள்ளலாமா? பணி செய்யும் பெண்கள் தமது பணி செய்யும் இடத்தில் தமது புர்காவை கழற்றி வைத்து விட்டு தமது பணியைச் செய்யலாம் என்று தாங்கள் கூறியதாக நான் கேள்விப்பட்டுள்ளேன் என்று இவர் கூறுகிறார். இந்த இளம் பெண்களிடம் குறைந்தபட்சம் இந்த

நற்பாக்கியமாவது இருந்திருக்கின்றது. அதாவது அத்துடன் தாங்கள் தடுத்தால் நான் அந்த பணியைச் செய்ய மாட்டேன் என்றும் அந்தப் பெண் எழுதியிருந்தார்.

முதல் விஷயம் என்னவென்றால், இதை நான் கூறக் காரணம் இது ஒரு பெண்ணின் கேள்வியல்ல. பல பெண்களின் கேள்வியாகும். எனவே அதுபற்றி விளக்குகிறேன். முதல் விஷயம் நான் அவ்வாறு கூறியது மருத்துவமனை பற்றியதாகும். மருத்துவர்களுக்கு சில சூழ்நிலைகளில் நிர்பந்தம் உள்ளது. வழக்கத்தில் இருந்து வரும் புர்கா அல்லது ஹிஜாப் அணிந்து அங்கு பணி செய்ய இயலாது. உதாரணமாக, அறுவை சிகிச்சை செய்யும்போது அங்கு அவர்களின் உடை அதற்கேற்ப இருக்கும். தலையில் தொப்பி இருக்கும். முகமூடி (மாஸ்க்) இருக்கும். நல்ல தளர்வான ஆடையும் இருக்கும். இது தவிர மற்ற சந்தர்ப்பங்களில் மருத்துவர்கள் கூட பர்தா அணிந்து பணி செய்யவும் முடியும். ரப்வாவில் நமது மருத்துவர் ஹமீதா இருக்கிறார்கள். இவர்களை எப்போதும் நான் பர்தாவில்தான் பார்த்துள்ளேன். மருத்துவர் நுஸ்ரத் ஜஹான் இருந்தார்கள். முழுமையாக பர்தா அணிபவராக அவர்கள் இருந்தார்கள். இங்கு (இலண்டனில்) வந்து கூட கல்வி கற்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் புதிய ஆராய்ச்சிகளுக்கேற்ப தமது தகுதியை வளர்ப்பதற்காக இங்கு இலண்டன் வரவும் செய்தார்கள். எப்போதும் பர்தாவில்தான் இருந்தார்கள். இன்னும் சொல்வதென்றால், தேவையை விட அதிகமாகவே பர்தாவை பேணி வந்தார்கள். இங்கும் கூட எவரும் அவர்களை ஆட்சேபனை செய்யவில்லை. அவர்களது தொழில் திறமையில் இது பாதிப்பை ஏற்படுத்தவும் இல்லை. பெரும் பெரும் அறுவை சிகிச்சைகளை அவர்கள் செய்துள்ளார்கள். எனவே, நிய்யத் இருந்தால் மார்க்கத்தின் வழியில் செல்வதற்காக பாதை திறக்கிறது. அதேபோன்று ஆராய்ச்சி செய்யும் பெண்களிடம், ஓர் இளம் பெண் ஆராய்ச்சி செய்வதற்குத் தகுதியுடையவளாக இருந்தால் ஆய்வகத்தில் அவருக்கு பிரத்யேக ஆடை அணிய வேண்டியது ஏற்பட்டால் அங்கு, ‘அங்குள்ள சூழ்நிலையின் ஆடையை அணியலாம்’ என்று கூறினேன். அப்போது சந்தேகமின்றி ஹிஜாப் (துப்பட்டா) அணிய வேண்டாம். ஏனெனில், அதில் தொப்பி போன்றவை அணிய வேண்டியதிருக்கும். ஆனால், வெளியே வந்ததும் இஸ்லாம் கட்டளையிட்ட பர்தாவை அணிய வேண்டும். வங்கிப் பணி என்பது மனித இனத்திற்கு சேவை செய்யும் பணி ஒன்றும் அல்ல. எனவே, பொதுவான சாதாரண பணிகளுக்கு – அதுவும் பெண்கள் அன்றாட உடைகள் மற்றும் மேக் அப்பில் இருக்கும் நிலையில், பிரத்யேக உடை எதுவும் அணியப்படாத நிலையில் – ஹிஜாபை (பர்தாவை) அகற்றி விடுவதற்கு அனுமதி தர இயலாது.

எனவே, வெட்கத்தை மேற்கொள்வதற்கு வெட்கத்தை வெளிப்படுத்தும் ஆடை அவசியமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பர்தாவை பேணுவதில் இப்போது இருந்து வரும் வழிமுறை வெட்கத்தை வெளிப்படுத்தும் ஆடையின் ஓர் அங்கமாகும். பர்தாவில் மென்மை காட்டினால் வெட்கத்தை வெளிப்படுத்தும் சாதாரண ஆடையிலும் கூட பல காரணங்களைக் கூறி மாற்றங்களைச் செய்து விடுவர். பிறகு இந்த சமுதாயத்தின் சாயலுக்கு உள்ளாகி விடுவர். இங்கு முன்னரே வெட்கமின்மை அதிகமாகிக் கொண்டு செல்கிறது. தமது மார்க்கத்தின் போதனையின்படி செல்பவர்களை குறிப்பாக முஸ்லிம்களை எவ்வாறு அவர்களின் மார்க்கத்திலிருந்து அகற்றுவது? என்று உலகம் ஆரம்பத்திலிருந்தே முயற்சி செய்து வருகின்றது. சுவிட்சர்லாந்தில் ஓர் இளம் பெண் வழக்கு தொடர்ந்தார். நான் பையன்களுடன் சேர்ந்து Swimming செய்வது எனக்கு வெட்கமாக இருக்கிறது. பள்ளிக்கூடம் என்னை ஆண்களுடன் சேர்ந்துதான் Swimming செய்ய வேண்டும் என்று கட்டுப்படுத்துகிறது. எனக்கு தனியாக பெண்களுடன் சேர்ந்து Swimming செய்வதற்கு அனுமதி வேண்டும் என்று அந்தப் பெண் வழக்கு தொடர்ந்தார். மனித உரிமைக் கழகத்தைச் சார்ந்தவர்கள், மனித உரிமையின் கொடியை ஏந்திக் கொண்டு அலைகிறார்கள். அவர்கள், நீங்கள் தனியாக நீந்த விரும்பினால் அவ்வாறு செய்யுங்கள். அது உமது தனிப்பட்ட உரிமையாகும். ஆனால் உமக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கும் அளவுக்கு இது ஒன்றும் பெரிய விஷயமல்ல என்று கூறினார்கள்.

எங்கு இஸ்லாமிய போதனை மற்றும் பெண்ணின் வெட்கம் குறித்த விவகாரம் வருகிறதோ அங்கு மனித உரிமைகளுக்கான அமைப்புகள் கூட சாக்குப்போக்குகளைக் கூறுகின்றன. அத்தகைய நிலையில் அஹ்மதிகள் முன்னரை விட அதிகமாக எச்சரிக்கையாக இருக்க வேண்டியதுள்ளது. பள்ளிக்கூடங்களில் சிறு குழந்தைகளுக்கு சில நாடுகளில் Swimming கட்டாயம் என்றால் பிறகு சிறுவர், சிறுமியர் முழுமையான நீச்சல் உடை அணிந்தவாறு Swimming செய்யுங்கள். அதனை இன்றைய நாட்களில் Burkini என்று கூறுகின்றனர். அதை அணிந்து நீந்த வேண்டும். அதன் மூலம் நாமும் கூட வெட்கமுடையோரின் ஆடையை அணிய வேண்டும் என்ற உணர்வு சிறுவர் சிறுமியருக்கு உருவாகும். பெற்றோர்கள் கூட சிறுவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். சிறுமியர் சிறுமியர் தனித்தனியாகவே Swimming செய்ய வேண்டும். அதற்காக முயற்சியும் செய்ய வேண்டும். இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகள் கடுமையாக அழுத்தம் தருகின்றன. அதாவது, மார்க்கப் போதனைகளை மற்றும் மரபுகளை முஸ்லிம்களுக்குள் இருந்தே ஒழித்து விட வேண்டும் என்று அவை நினைக்கின்றன. இந்த சக்திகள் ஒரு முயற்சியைச் செய்கின்றன. மார்க்கத்தை கருத்து சுதந்திரம் என்ற பெயரில் ஒழித்து விட வேண்டும். அதுவும் பலவந்தமாக மார்க்கத்தை நாம் ஒழிக்கிறோம் என்று நம்மீது எந்தப் பழியும் வராத அளவுக்கு அதனை செய்ய வேண்டும். இவர்கள் அனுதாபத்துடன் நடந்து கொள்பவர்கள் என்று பிறர் கருத வேண்டும் என்று இவர்கள் நினைக்கிறார்கள். ஷய்த்தானைப் போன்று இனிக்க இனிக்க மார்க்கத்தின் மீது தாக்குதல் நடத்த நினைக்கின்றனர்.

ஆனால், இக்காலத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சியின் பணி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதற்காக நாம் முழுமையான முயற்சி செய்ய வேண்டியது வரும். சிரமப்பட வேண்டியது வரும். நாம் சண்டையிட வேண்டாம். ஆனால், ஞானத்துடன் இம்மக்களுடன் நடந்து கொள்ள வேண்டும். இன்று நமது மார்க்கத்துடன் தொடர்புடைய விஷயத்தில் இவர்களின் ஒரு கருத்தை நாம் ஏற்றுக் கொண்டோம் என்றால் பிறகு சிறிது சிறிதாக நமது நிறைய கருத்துக்களில், நிறைய போதனைகளில் இவர்கள் கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டே செல்வர். நாம் துஆக்கள் செய்வதில் அழுத்தம் காட்ட வேண்டும். அல்லாஹ் இந்த ஷய்த்தானிய தந்திரங்களை எதிர்கொள்ள நமக்கு தைரியமும் வாய்ப்பும் வழங்குவானாக! மேலும் நமக்கு உதவியும் செய்வானாக! நாம் உண்மையின் மீது நிலை நின்றால் நிச்சயமாக உண்மையில் நாம் நிலைநிற்கின்றோம். நிச்சயமாக நமக்கு ஒருநாள் வெற்றியும் உறுதியானது. இஸ்லாமிய போதனையே உலகில் வெற்றி பெற வேண்டியுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: உண்மையில் ஒரு தைரியமும் துணிவும் உள்ளது. பொய்யன் கோழையாக இருக்கிறான். எவரது வாழ்வு அசுத்தம், அழுக்கு மற்றும் பாவத்தில் மூழ்கியுள்ளதோ அத்தகையவர் எப்போதும் பயந்து கொண்டிருக்கிறார். அவரால் அதை எதிர்த்து நிற்க இயலாது. ஓர் உண்மையான மனிதரைப் போன்று துணிவுடனும் தைரியத்துடனும் தனது உண்மையை வெளிப்படுத்த இயலாது. தமது கற்புடைமைக்கு ஆதாரம் தர இயலாது. உலக விவகாரத்திலேயே சிந்தித்துப் பாருங்கள். இறைவன் ஒருவருக்கு சிறிதளவு வசதியை தந்திருந்து அதன் மீது பொறாமைப்படுபவர் இல்லாமல் இருக்க முடியுமா? ஒருவருக்கு வசதி இருந்தால் கண்டிப்பாக பொறாமைப்படுபவர்கள் இருக்கிறார்கள். அவருடனேயே இருக்கிறார்கள். இதே நிலைதான் மார்க்க விவகாரத்திலும் உள்ளது. ஷய்த்தானும் சீர்திருத்தத்தின் எதிரியாவான். எனவே, மனிதன் தனது கணக்கை தூய்மையாக வைக்கட்டும். இறைவனுடன் உள்ள தொடர்பை சரியாக்கி வைக்கட்டும். இறைவனை திருப்திப்படுத்தட்டும். பிறகு அவர் எவருக்கும் பயப்பட வேண்டாம். எவரையும் பொருட்படுத்தவும் வேண்டாம். தானே தண்டனைக்கு ஆளாக்குவதற்கு காரணமாக இருக்கின்ற எல்லா விவகாரங்களிலிருந்தும் விலகியிருங்கள். இவை அனைத்தும் மறைவான ஆதரவு மற்றும் இறைவன் தரும் நல்வாய்ப்பு இல்லாமல் நடக்க இயலாது. இறைவனது அருள் துணை நிற்காமல் மனித முயற்சி மட்டும் எதனையும் செய்ய இயலாது. (4:29) خُلِقَ الْاِنْسَانُ ضَعِیْفًا மனிதன் பலவீனமானவன். தவறுகளால் நிறைந்தவன். துன்பங்கள் நாலாபுறமும் சூழ்ந்துள்ளன. எனவே, அல்லாஹ் நன்மை செய்ய வாய்ப்பு வழங்க துஆ செய்ய வேண்டும். இறை ஆதரவு மற்றும் அருளின் வாரிசாக வேண்டும். (மல்.ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 252; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, துஆவுடன் இவ்வுலகை ஒப்புக் கொள்ள வைக்க வேண்டும். அதற்காக இறைவனுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்த வேண்டும்.

பிற மார்க்கங்கள் நிரந்தரமானவை அல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தத்தமது காலத்தில் தோன்றி அக்கால சீர்திருத்த தேவைகளை நிறைவேற்றி விட்டு அவை முடிந்து விட்டன. அதனால்தான் அந்த மத நூல்களில் எண்ணற்ற விஷயங்கள் விடுபட்டுள்ளன. இடைச்செருகல்கள் ஏற்பட்டு விட்டன. மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. ஆனால், இஸ்லாம் அதிலிருந்து

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய
மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக்
கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப்
-பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும்
விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179


**O.A.N. DOORS & STEELS**

**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**

*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*

Ambai Road, (Opp. Karuna Clinic),
Kulavanikarpuram, Tirunelveli - 627 005

O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

இதுவரை பாதுகாப்பாக உள்ளது. ஆனால், இஸ்லாம் நிரந்தரமாக இருக்கக் கூடியதாகும். திருக்குர்ஆனின் போதனைகள் இறுதி நாள் வரைக்கும் நிலைத்திருப்பவையாகும். எனவே நாம் எந்த தாழ்வு மனப்பான்மையும் இன்றி நமது போதனையின்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். மேலும் அதன் மீது நிலைத்து நிற்க வேண்டும். பிறருக்கும், அவர்கள் செய்பவை இறை விருப்பத்திற்கு மாற்றமானவையும், அழிவின் பக்கம் இட்டுச் செல்பவையும் ஆகும் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். இஸ்லாம் என்பது தவறான கட்டுப்பாடுகளை விதித்து மனிதனை துன்புறுத்தக் கூடிய மார்க்கம் அல்ல. மாறாக, தேவைக்கேற்ப அதன் போதனையில் மென்மையின் அம்சமும் உண்டு. நான் கூறியதுபோன்று அந்த மருத்துவர்களுக்கும் சில நோயாளிகளுக்கும் அவர்கள் தம்மை ஆண் மருத்துவரிடம் காண்பிக்க வேண்டியதுள்ளது. அத்தகையோருக்கு பர்தாவில் எந்தக் கடுமையும் இல்லை. மனித உயிரைக் காப்பதற்கும், மனித உயிரை வேதனையிலிருந்து காப்பாற்றவும் செய்வது முதல் நோக்கமாகும். அதனால்தான் கட்டாய சூழ்நிலையில் இறந்தவற்றையும், பன்றியின் மாமிசத்தையும் உண்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், உயிரைக் காப்பாற்றும் அளவுக்கு மட்டுமே அது அனுமதிக்கப்பட்டதாகும். இதுபோன்று மருந்துகளில் ஆல்கஹால் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இவ்வழியில் ஷய்த்தானிய சக்திகள் நம்மை நடத்த விரும்பினால் அதன் நோக்கம் நம்மிடமிருந்து சிறிது சிறிதாக மார்க்க எல்லைகளை ஒழித்து விடுவதும் மார்க்கத்தை அழித்து விடுவதுமாக இருந்தால், இதற்கு எதிராக அஹ்மதிகளாகிய நாம் ஜிஹாது செய்ய வேண்டும். நாம் இஸ்லாமிய போதனைக்கு எல்லாவற்றின் மீதும் முக்கியத்துவம் தரும்போதுதான், அதற்காக நாம் இறைவனுக்கு முன் குனியும்போதுதான் இது சாத்தியமாகும். அதன் மூலம் இறை உதவியால் நமக்கு வெற்றி கிடைக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் வாளின் ஜிஹாது கிடையாது. மாறாக, நஃப்ஸின் சீர்திருத்தத்தின் ஜிஹாதுதான் உள்ளது. இந்த முன்னேற்றமடைந்த நாடுகளில் வசிக்கும் முஸ்லிம்கள் குறிப்பாக இவ்வுலகில் வாழும் அஹ்மதி முஸ்லிம்களைப் பார்த்தே இதை நான் கூறுகின்றேன். நன்றியுணர்வை வெளிப்படுத்துவது, நாட்டிற்காக தியாகம் செய்வது, நாட்டிற்கு எந்த வடிவத்திலாவது வெற்றியை ஈட்டித் தருவது ஆகியவற்றை மிக உயர்ந்த தரத்திற்கு கொண்டு செல்ல அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். இது நடந்தால் ஷய்த்தானிய சக்திகளின் வாய் அடைபட்டுப் போகும். இந்த முஸ்லிம்கள் நாட்டையும் சமுதாயத்தையும் முன்னேற்றத்திற்குரிய உண்மையான தரத்தின் பக்கம் எடுத்துச் செல்பவர்கள் ஆவர். நாட்டிற்கு எதிராக வேலை செய்பவர்கள் அல்ல. நாம் இந்த மக்களையும் அரசாங்கத்தையும் இதனை ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும். அதாவது, இம்மக்கள் தமது மார்க்கத்தை கடைபிடிப்பார்கள் என்றால் அதற்குள் தலையிடுவது அரசு மற்றும் நீதிமன்றத்தின் பணியல்ல. இதனால் நிம்மதியின்மை உருவாகும். உள்ளூர் மக்கள் மற்றும் அகதிகளுக்கு இடையில் இடைவெளி உருவாகும். இந்த நாடுகளில் அகதிகளாக வந்தவர்களின் மூன்றாவது தலைமுறை இப்போது இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் நாட்டிற்கு ஒரு சேதம் விளைவிக்கிறார்கள் என்றால் விசுவாசம் இல்லாமல் நடக்கிறார்கள் என்றால் நாட்டில் பொய்யையும் வெறுப்பையும் பரப்புகிறார்கள் என்றால் பிறகு அரசுக்கும் உரிமை உள்ளது. அவர்களைப் பிடிக்கலாம். தண்டனையும் தரலாம். மற்றபடி எந்தவொரு மார்க்க போதனையின்படி செயல்படுவதற்கு மக்களை தடை செய்வது சரியல்ல. அவ்வாறு நீங்கள் செய்யா விட்டால் நீங்கள் நாட்டின் சூழ்நிலையோடு உரிய முறையில் ஒன்றி விடவில்லை என்று கூறுவதற்கான உரிமையும் அவர்களுக்கு இல்லை.

அஹ்மதிகளாகிய நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இக்காலம் மிகவும் ஆபத்தான காலமாகும். ஷய்த்தான் எல்லா தரப்பிலிருந்தும் ஆவேசமான தாக்குதலைத் தொடுக்கிறான். குறிப்பாக முஸ்லிம்கள் அதுவும் குறிப்பாக அஹ்மதி முஸ்லிம்கள் ஆண்கள், பெண்கள் அனைவரும் மார்க்க நிலைப்பாட்டை நிலைநாட்ட முயற்சி செய்யாவிட்டால் நம்மை பாதுகாப்பதற்கு எந்த உத்திரவாதமும் நம்மிடம் இல்லை. நாம் மற்றவரை விட அதிகமாக இறைவனது பிடியில் வந்து விடுவோம். நாம் உண்மையைப் புரிந்தோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு புரிய வைத்தார்கள். பிறகும் கூட நாம் செயல்படவில்லை என்றாகி விடும். எனவே, நாம் அழிந்து விடுவதிலிருந்து நம்மை காப்பாற்ற வேண்டும் என்றால் ஒவ்வொரு இஸ்லாமிய போதனையுடன் இசைந்து உலகில் வாழ்வது அவசியமாகும். முன்னேற்றமடைந்த நாட்டின் முன்னேற்றத்தில் நமது வாழ்வுக்கு உத்திரவாதம் உள்ளது என்று கருதாதீர்கள். அதனுடன் சென்றால் தான் நாம் நிலைக்க முடியும் என்று கருத வேண்டாம். இந்த முன்னேற்றமடைந்த நாடுகளின் முன்னேற்றம் எல்லையைத் தொட்டு விட்டது. இவர்களின் ஒழுக்கநிலைகள் இவர்களை அழிவின் பக்கம் எடுத்துச் சென்று கொண்டிருக்கின்றன. அதன் தாக்கம் வெளிப்பட்டு விட்டது. அல்லாஹ்வின் கோபத்தை இவர்கள் கூவி அழைக்கின்றனர். அழிவினை அழைக்கின்றன. இந்நிலையில் இவர்களின் சாயலில் நாம் ஆகி விடுவதற்குப் பகரமாக மனிதாபிமானத்தின் அடிப்படையில் நாம்தான் இவர்களுக்கு சரியான வழியைக் காட்டி இவர்களைக் காப்பாற்ற வேண்டும். இவர்களின் சாயலில் நாமே ஆகி விடக் கூடாது. இவர்களிடம் சீர்திருத்தம் ஏற்படவில்லையென்றால் இவர்களின் அகம்பாவத்தின் காரணமாகவும் மார்க்கத்தை விட்டு விலகி இவர்கள் மிகத் தொலைவில் சென்று விட்டதன் காரணமாகவும் வெளிப்படையாகப் பார்க்கும்போது இவர்களிடம் சீர்திருத்தம் ஏற்படுவது சிரமமாகத் தோன்றுகிறது. பிறகு வருங்கால உலக முன்னேற்றத்தில் நல்லொழுக்கங்களையும் மார்க்கத்தின் கண்ணியத்தையும் நிலைநாட்டக் கூடிய சமுதாயங்கள் தமது பங்கை ஆற்றும். அவை மூலமே வருங்கால உலகின் முன்னேற்றம் ஏற்படும்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று குறிப்பாக இளைஞர்கள் அல்லாஹ்வின் போதனையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. உலகின் தாக்கத்திற்குள்ளாகி அதன் பின்னால் போவதற்குப் பதிலாக உலகை தமது பின்னால் வர வைக்க வேண்டும். நான் பர்தா மற்றும் உடைகள் சம்பந்தமாக என் பேச்சைத் தொடங்கியது போன்று இது சம்பந்தமாக இதனையும் கூற விரும்புகிறேன். மிகவும் ஆதங்கத்துடன் கூற விரும்புகிறேன்.

இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்திற்கு பர்தாவா மிக முக்கியமானது? இந்த போதனை இப்போது பழைமையாகி விட்டது. நாம் உலகை எதிர்கொள்வதற்கு இதையெல்லாம் விட்டு விட வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர் – நவூதுபில்லாஹ், அத்தகையோர் தெளிவு பெற வேண்டும். உலகியல்வாதிகள் பின்னால் சென்றீர்கள் என்றால் அவர்களைப் போன்று வாழ்வைக் கழித்தீர்கள் என்றால் பிறகு உலகை எதிர்த்து நிற்பதற்குப் பதில் உலகில் மூழ்வி விடுவீர்கள். தொழுகையும் கூட சிறிது சிறிதாக அதன் வெளிப்படையான நிலையில் நின்று போய் விடும். பிறகு பிற நன்மைகள், மார்க்கச் செயல்கள் வெளி வடிவத்திலேயே நின்று விடும். பிறகு சிறிது சிறிதாக அவையும் முடிவுக்கு வந்து விடும்.

எனவே, அல்லாஹ்வின் எந்தக் கட்டளையையும் சாதாரணமாகக் கருதக் கூடாது. இது மிகவும் அஞ்சத்தக்க இடமாகும். இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கு அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் கட்டளையிட்ட ஒவ்வொன்றும் மிகவும் அவசியமாகும். பர்தாவின் கண்டிப்பான சட்டங்கள் பெண்களுக்கு மட்டுமல்ல. இஸ்லாமிய கட்டுப்பாடுகள் பெண்களுக்கு மட்டுமல்ல. மாறாக, அவை ஆண் பெண் இரு பிரிவினருக்கும் உரியதாகும். அல்லாஹ் முதலில் ஆண்களுக்கு வெட்கம் மற்றும் பர்தாவைப் பேணுவதன் வழிமுறையைக் கூறினான். இந்த வகையில் இறைவன் கூறினான்:

قُلْ لِّلْمُؤْمِنِيْنَ يَغُضُّوْا مِنْ اَبْصَارِهِمْ وَيَحْفَظُوْا فُرُوْجَهُمْ
ذٰلِكَ اَزْكٰى لَهُمْ ۔ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا يَصْنَعُوْنَ

நீர் நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் அவர்கள் தமது கண்களை கீழ் நோக்கி வைத்திருக்குமாறும். தமது மறைவான உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் கூறுவீராக! இது அவர்களுக்கு அதிக தூய்மைக்குக் காரணமாக அமையும். நீங்கள் செய்வதை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிபவனாவான். **(24:31)**

அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களைப் பார்த்து முதலில் கீழ் நோக்கிப் பார்வையை வைக்குமாறு கூறினான். ஏன்? ஸாலிக அஸ்காலஹும் – தூய்மைக்கு அது மிகவும் தேவையாகும். தூய்மை இல்லையென்றால் இறைவன் கிடைக்க மாட்டான். எனவே, பெண்கள் பர்தாவை பேண வேண்டும் என்று கூறுவதற்கு முன்னதாக ஆண்களிடம் உங்கள் உணர்வுகள் எழக் காரணமாக உள்ள எல்லா காரியங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறி விட்டான். பெண்கள் கண்களைத் திறந்து நேரடியாக பார்ப்பது, அவர்களுடன் ஒன்றாகக் கலந்து விடுவது, தீய படங்களைப் பார்ப்பது, அந்நியப் பெண்களிடம் Chat செய்வது, முகநூல் அல்லது வேறு ஊடகங்கள் மூலம் Chat செய்வது ஆகியவை தூய்மையாகாது. எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல இடங்களில் இது பற்றி தெளிவாக போதனை செய்துள்ளார்கள்.


## சுத்தமான தேன் கிடைக்கும்

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**
B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)
Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)


**A. பஷீர் அஹ்மது**
வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். **Ph : +91 98437 22215**

ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: இது இறைவனின் வார்த்தையாகும். அவன் தனது தெளிவான பகிரங்கமான வார்த்தைகளால் நமது ஒவ்வோர் அசைவிலும் அசையாமையிலும் குறிப்பிட்ட வரம்புகளை நிர்ணயித்து விட்டான். மனித ஒழுக்கங்களின் தூய வழிகளைக் கற்றுத் தந்தான். அவனே கண், காது, நாவு போன்றவற்றைப் பாதுகாக்க முழுமையான கவனமூட்டலை வழங்கினான். குல் லில் முஃமினீன யகும்ழு மின் அப்ஸாரிஹிம் வயஹ்பளூ ஃபுரூஜஹூம் ஸாலிக அஸ்காலஹூம். நம்பிக்கை கொண்ட ஆண்கள் தமது கண்கள் மற்றும் மறைவிடத்தை அந்நிய பெண்களிடமிருந்து காத்துக் கொள்ளுங்கள் என்று கூறுவீராக. ஒவ்வொரு பார்க்கக் கூடாத கேட்கக் கூடாத செய்யக் கூடாத காரியங்களையும் விட்டு விலகுங்கள். இந்த வழி உங்கள் உட்புறத் தூய்மைக்கு காரணமாக அமையும். உள்ளம் விதவிதமான மன எழுச்சிகளிலிருந்தும் பாதுகாப்பாக இருக்கும். ஏனெனில் பெரும்பாலான மன எழுச்சிகளைத் தூண்டுவதும், மிருகத்தனமான ஆற்றல்களைக் குழப்பத்தில் போடுவதும் இந்த உறுப்புகளேயாகும்.

இப்போது பாருங்கள். திருக்குர்ஆன் அந்நிய பாலினரிடமிருந்து தப்பிப்பதற்காக எந்த அளவு வலியுறுத்திக் கூறியுள்ளது. எந்த அளவுக்கு தெளிவாக விளக்கியுள்ளது. ஈமான் உள்ளவர்கள் தமது கண்கள், காதுகள், மறைவான உறுப்புகள் ஆகியவற்றை தமது கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். தூய்மையற்ற செயல்களிலிருந்து அவற்றை தடுத்து வைக்க வேண்டும். (பராஹீனே அஹ்மதியா. ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 209 அடிக்குறிப்பு)

பிறகு கழ்ழே பஸர் என்றால் என்னவென்பதை விளக்கியவாறு கூறினார்கள்: தகாத இடத்தை உற்றுப் பார்ப்பதை விட்டு பாதுகாத்துக் கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்ட பிற பொருள்களைப் பார்ப்பதும் ஆகிய வழிமுறைக்கு அரபியில் கழ்ழே பஸர் என்று பெயர். அதாவது பாதி மூடிய கண்ணால் பார்க்கக் கூடியவற்றை மட்டும் பார்த்து பிறவற்றிலிருந்து பார்வையைப் பாதுகாத்து வைத்தல், அனுமதிக்கப்பட்ட மற்றவற்றை மட்டும் கண் திறந்து பார்த்தல் ஆகியவற்றை கழ்ழே பஸர் என்று அரபியில் சொல்லப்படும். ஒவ்வொரு தூய்மையாளரும் தம்மை தூய்மையாக வைத்திருக்க விரும்பினால் மிருகங்களைப் போன்று விரும்பிய பக்கம் எல்லாம் கண்களை உயர்த்திப் பார்க்காமல் இருக்க வேண்டும். அத்தகையவர் இந்த சமூக வாழ்வில் பார்வையை கீழ்நோக்கி வைக்கும் பழக்கத்தை கடைபிடிப்பது அவசியமாகும். இது கற்புடைமை என்று அழைக்கப்படுகிறது.

இன்னோரிடத்தில் மேலும் விளக்கிக் கூறுகின்றார்கள்: நம்பிக்கை கொண்டவர்களிடம் கூறுவீராக. அந்நியப் பெண்களைப் பார்ப்பதை விட்டும் இச்சையைத் தூண்டும் இடத்தை பார்ப்பதை விட்டும் கண்களை மூடி வைக்க வேண்டும். எந்த அளவுக்கு என்றால் முழுமையாக முகம் தென்படாத அளவுக்கும் முகத்தின் அழகு தென்படாத வகையில் கண்களை வைக்க வேண்டும். ஒரு விஷயத்தைப் பேணி வாருங்கள். ஒருபோதும் முழு கண்களையும் திறந்து பார்க்காதீர்கள். இச்சையுடனும் பார்க்காதீர்கள். இச்சையில்லாமலும் பார்க்காதீர்கள். அத்தகைய பார்வை இறுதியில் தடுமாறக் காரணமாகி விடும். சுதந்திரமான நிலையில் மிக தூய நிலையைப் பாதுகாப்பாக வைக்க இயலாது. இறுதியில் சோதனை வந்து விடுகிறது. கண் தூய்மையாக இல்லாமல் உள்ளம் தூய்மையாக இருக்க முடியாது. அஸ்கா என்ற அந்த தூய நிலையை அதாவது உண்மையைத் தேடுபவர் அடி எடுத்து வைக்கக்கூடிய அவ்விடத்தை அவரால் பெற இயலாது. இதனால்தான் உடலிலுள்ள எல்லா துவாரங்களையும் பாதுகாத்து வைக்குமாறும் அதாவது எது வழியாக தீமைகள் நுழைய முடியுமோ அதனை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும், துவாரம் என்ற சொல் புகழுக்குரிய இறை வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் இச்சைகளின் உறுப்புகள், காது, நாக்கு, வாய் அனைத்தும் அடங்கும். இப்போது பாருங்கள். இந்த எல்லா போதனைகளும் எவ்வளவு மகிமைக்குரியவையாக இருக்கின்றன. எந்தக் கோணத்திலும் அறிவற்ற விஷயங்களில் உள்ள கூடுதல் குறைவுகளில் அழுத்தம் தரப்படவில்லை. ஞானத்துடன் கூடிய நடு நிலைமை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசனத்தைப் படிப்பவர் உடனே புரிந்து கொள்வார். கண்களைத் திறந்து பார்வையை வீசுகின்ற வழக்கத்தை ஏற்படுத்தாதீர்கள் என்ற வழிகாட்டலின் பொருள் ஏதாவது ஒரு நேரத்தில் அவர் சோதனையில் ஆழ்த்தப்பட்டு விடக் கூடாது என்பதாகும். ஆண், பெண் ஆகிய இரு பாலாரும் தடுமாறி விடக் கூடாது. (திரியாக்குல் குலூப். ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 164-165) இதுவே ஆண்களுக்கான இஸ்லாமிய போதனையாகும். முதலில் எல்லா வகையிலும் கட்டுப்பாடுகள் தரப்பட்டன. பிறகு பெண்களுக்கு கட்டளையிடப்பட்டது. இந்த எச்சரிக்கைக்கு எல்லாம் பிறகும் கூட உங்கள் பர்தாவில் நீங்களும் கவனம் செலுத்த வேண்டும். முற்றிலும் வெட்கமின்மையே காணப்படுகிற நாடுகளில் பர்தா தேவையில்லை என்று நாம் எவ்வாறு கூற முடியும்? திரையிடாத பெண்கள் பல குழப்பங்களை, நட்பு ரீதியிலான தொடர்புகளை ஏற்படுத்துகிறார்கள். அதிலிருந்து தப்பிப்பதற்கு அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். இதில் இன்னொன்றும் தெளிவாகி விட்டது. பெண்களுக்கு ஆண்களுடன் சேர்ந்து Swimming செய்ய அனுமதி இல்லாதது போன்றே ஆண்களும் கூட பெண்களிடம் போய் அவர்களுடன் சேர்ந்து Swimming செய்ய அனுமதி இல்லை. ஆகவே இந்த கட்டுப்பாடுகள் எல்லாம் பெண்களுக்கு மட்டுமல்ல; ஆண்களுக்கும் ஆகும். ஆண்கள் தமது கண்களை மேலே உயர்த்திப் பார்ப்பதை விடுத்து கீழ் நோக்கி வைக்குமாறு கூறப்பட்டதிலிருந்து பெண்களின் கண்ணியம் நிலைநாட்டப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் ஒவ்வொரு கட்டளையும் ஞானம் நிறைந்தது. தீமைகளின் சாத்தியக்கூறை அது அகற்றுகிறது.

ஜெர்மனியில் கடந்த ஆண்டு மாநாட்டில் ஆண் மற்றும் பெண்களுக்கு இடையிலுள்ள வித்தியாசம் அவர்களது கடமைகள், பணிகள், பெண்களின் உரிமைகள் பற்றி பேசினேன். ஒரு ஜெர்மனி பெண் முழு சொற்பொழிவையும் கேட்டார். பிறகு கூறுகிறார்: இஸ்லாம் பெண்களின் உரிமையை விழுங்குவதாக முதலில் கருதினேன். ஆனால் இன்று உங்கள் பேச்சைக் கேட்டதும் இஸ்லாம் பெண்களின் உரிமைகளைத் தருவது பற்றியும், அவர்களை கண்ணியப் –படுத்துவதும் குறித்து மிகவும் நுட்பத்திற்குள் சென்று விளக்குகிறது என்று தெரிய வருகிறது. ஆக, எந்த அஹ்மதி பெண்களுக்கும் எவ்வகையான தாழ்வு மனப்பான்மையும் அடைய வேண்டிய அவசியம் இல்லை. இஸ்லாமிய போதனை தான் உலகிற்கு அமைதி நிறைந்ததாகவும், இறைவன் பக்கம் எடுத்துச் செல்வதாகவும் ஆக்க வேண்டியதுள்ளது. உலகிற்கு ஒரு காலத்தில் அவ்வுணர்வு ஏற்படும். இது தவிர வேறு வழியில்லை. இஸ்லாமிய போதனையின்படி யோசிக்கவும் செயல்படுவதையும் தவிர வேறு வழியில்லை.

இஸ்லாம் ஆண்களுக்கு தமது கண்களை கீழ் நோக்கி வைக்குமாறு கட்டளையிட்ட பிறகு ஆண்கள், பெண்களின் கண்ணியத்தை நிலைநாட்டுமாறு கட்டளையிட்ட பிறகுதான் பெண்களுக்கு அவர் தம் உரிமை குறித்து விபரமாக விவரிக்கிறது. (பெண்களாகிய) நீங்களும் கூட உங்கள் கண்களை கீழ் நோக்கி வைக்க வேண்டும் மற்றும் எவ்வாறு பர்தா அணிய வேண்டும்? யார் யாரிடம் பர்தாவை அணிய வேண்டும்? என்று அது கூறுகிறது. இதன்படி செயல்படுவீர்கள் என்றால் வெற்றி பெறுவீர்கள். இறுதியில் இறைவன் கூறுகிறான். பர்தா மற்றும் வெட்கம் உங்கள் வெற்றியின் அடையாளமாகும். இதனால் உங்கள் உலகமும் மறுமையும் கூட சரியாகி விடும். இந்த வகையில் அது கூறுகிறது:

وَقُلْ لِّلْمُؤْمِنٰتِ يَغْضُضْنَ مِنْ اَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ
فُرُوْجَهُنَّ وَلَا يُبْدِيْنَ زِيْنَتَهُنَّ اِلَّا مَا ظَهَرَ مِنْهَا وَلْيَضْرِبْنَ بِخُمُرِهِنَّ عَلٰى جُيُوْبِهِنَّ وَلَا
يُبْدِيْنَ زِيْنَتَهُنَّ اِلَّا لِبُعُوْلَتِهِنَّ اَوْ اٰبَآئِهِنَّ اَوْ اٰبَآءِ بُعُوْلَتِهِنَّ اَوْ اَبْنَآئِهِنَّ اَوْ اَبْنَآءِ بُعُوْلَتِهِنَّ
اَوْ اِخْوَانِهِنَّ اَوْ بَنِيْٓ اِخْوَانِهِنَّ اَوْ بَنِيْٓ اَخَوٰتِهِنَّ اَوْ نِسَآئِهِنَّ اَوْ مَا مَلَكَتْ اَيْمَانُهُنَّ اَوِ
التّٰبِعِيْنَ غَيْرِ اُولِي الْاِرْبَةِ مِنَ الرِّجَالِ اَوِ الطِّفْلِ الَّذِيْنَ لَمْ يَظْهَرُوْا عَلٰى عَوْرٰتِ
النِّسَآءِ وَلَا يَضْرِبْنَ بِاَرْجُلِهِنَّ لِيُعْلَمَ مَا يُخْفِيْنَ مِنْ زِيْنَتِهِنَّ وَتُوْبُوْٓا اِلَى اللّٰهِ جَمِيْعًا
اَيُّهَ الْمُؤْمِنُوْنَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ

நீர் நம்பிக்கை கொண்ட பெண்களிடம், அவர்கள் தங்கள் பார்வைகளை கீழ்நோக்கி வைத்திருக்குமாறும், தங்கள் மறைவான உறுப்புக்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் தானாகவே வெளிப்படுவதைத் தவிர தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமல் இருக்குமாறும் தங்கள் முன்தானை ஆடையால் தங்கள் மார்புகளை மறைத்து அணிந்து கொள்ளுமாறும் அவர்கள் தங்கள் கணவர்கள் அல்லது தங்கள் தந்தையர்கள் அல்லது தங்கள் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தங்கள் ஆண்மக்கள் அல்லது தங்கள் கணவர்களின் ஆண்மக்கள் அல்லது தங்கள் சகோதரர்கள் அல்லது தங்கள் சகோதரர்களின் ஆண்மக்கள் அல்லது தங்கள் சகோதரிகளின் ஆண்மக்கள் அல்லது தங்கள் (இனத்தைச் சார்ந்த) பெண்கள் அல்லது தங்கள் வலக் கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் அல்லது பாலுணர்ச்சிக்கு அப்பாற்பட்ட ஆண் ஊழியர்கள் அல்லது பெண்களின் மறைவான உறுப்புக்களைப் பற்றித் தெரியாத சிறுவர்கள் ஆகியவர்களைத் தவிர வேறெவரிடமும் தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமல் இருக்குமாறும் தங்கள் அலங்காரத்திற்குள் மறைத்து வைத்திருப்பு வெளிப்பட வேண்டும் என்பதற்காகத் தங்கள் கால்களை (நிலத்தில் வேகமாக)த் தட்டி நடக்காமல் இருக்குமாறும் கூறுவீராக. நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் யாவரும் வெற்றி பெற வேண்டும் என்றால் அல்லாஹ்வின்பால் திரும்புங்கள். **(24:32)**

ஆண்களும் பெண்களும் கண்களை கீழ் நோக்கி வைப்பதன் மூலமே மற்றும் பர்தாவின் மூலமே பெண்களின் கண்ணியம் பாதுகாக்கப்படும். முன்னேற்றம் அடைந்த நாடுகளில் கண்ணியம் மற்றும் கற்புடைமையை பாதுகாப்பதன் அளவுகோல் மாறி விட்டது. அங்கு அன்னியர்களுடன் உள்ள தொடர்புகள் இளைஞர் மற்றும் பெண்களின் விருப்பத்துடன் நடந்தால் பிறகு அது விபச்சாரம் என்று அழைக்கப்படாது. விருப்பம் இல்லாமல் நடந்தால் மட்டும் விபச்சாரம் என்றழைக்கப்படுகிறது. இத்தகைய வீழ்ச்சி வந்த பிறகு நம்பிக்கை கொண்டவர் இறைவனது அடைக்கலத்தில் வருவதற்காக அதிகமாக துஆவும் முயற்சி செய்வதும் அவசியமாகும். இஸ்லாமிய போதனையை ஆட்சேபனை செய்வோர் பெண்களை திரையிட்டு மறைத்து பர்தா என்று கூறி பெண்களின் உரிமை பறிக்கப்படுகிறது என்று கூறுகிறார்கள். இதனால் பக்குவப்படாத மனங்களை உடைய பெண்கள் தாக்கத்திற்கு உள்ளாகிறார்கள். இஸ்லாமிய பர்தாவின் பொருள் சிறையில் அடைப்பதில்லை. வீட்டின் நான்கு சுவருக்குள் அடைப்பது என்று அதற்கு பொருளல்ல. மாறாக, வெட்கத்தை நிலைநாட்டுவதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இக்காலத்தில் பர்தாவின் மீது தாக்குதல் தொடுக்கப்படுகிறது. ஆனால், இம்மக்கள் அறியவில்லை. இஸ்லாமிய பர்தாவின் பொருள் சிறைச்சாலை அல்ல. மாறாக, அது ஒருவகை தடையாகும். அதாவது அன்னிய ஆணும் பெண்ணும்

ஒருவரையொருவர் பார்க்காமல் இருப்பதற்காக உள்ள தடையாகும். பர்தா இருந்தால் தடுமாற்றத்திலிருந்து பாதுகாக்கப்படுவர். ஒரு நடுநிலையாளர் கூற முடியும். அன்னிய ஆணும் பெண்ணும் ஒன்றாக எந்த தடையும் இன்றி சந்திக்க முடிந்தால் உலாவினால் எவ்வாறு மன எழுச்சியிலிருந்து கட்டாய சூழ்நிலையில் தடுமாறாமல் இருப்பர்? பெரும்பாலான நேரங்களில் கேட்கவும் பார்க்கவும் வருவது என்னவென்றால், அன்னிய ஆணையும் பெண்ணையும் ஓரிடத்தில் தனித்திருக்கவும், வாசல் கதவு அடைக்கப்பட்டு இருக்கவும் செய்வதையும் கூட அத்தகைய சமுதாயங்கள் தவறாக நினைப்பதில்லை. இதன் தீய விளைவைத் தடுக்கவே எவரும் தடுமாற்றமடையக் கூடிய அத்தகைய பேச்சுக்களை பேச இஸ்லாமிய ஷரீஅத் அனுமதி தரவில்லை. எங்கு அந்நிய ஆணும் பெண்ணும் ஒன்று சேர்ந்திருக்கிறார்களோ அங்கு மூன்றாவதாக ஷய்த்தான் இருக்கிறான் என்று இஸ்லாம் அத்தகைய சூழ்நிலைகளைக் குறித்துக் கூறுகிறது. இந்த தீய போதனைகளால் ஐரோப்பா அனுபவித்துக் கொண்டிருக்கிற இந்த தீய விளைவைப் பற்றி ஆய்வு செய்யுங்கள். இந்த தீய வழக்கங்களினால் கட்டுப்பாடின்றி மிகவும் வெட்கம் கெட்ட வாழ்க்கை வாழப்படுகிறது. இது இந்த போதனையின் விளைவேயாகும். ஒரு பொருளை நம்பிக்கை துரோகத்திலிருந்து காப்பாற்ற விரும்பினால் அதனை பாதுகாப்பாக வையுங்கள். பாதுகாப்பாக வைக்கவில்லை என்றால், இவர்கள் நல்லவர்கள் தாம் என்று கருதினால், அது கண்டிப்பாக அழிந்து விடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இஸ்லாமிய போதனை எத்தகைய தூய போதனையாக இருக்கின்றது. அது ஆண்களையும் பெண்களையும் தனியாக வைத்து தடுமாற்றத்திலிருந்து பாதுகாத்துள்ளது. மனித வாழ்வை தடுக்கப்பட்டதாகவும் கசப்பாகவும் ஆக்கவில்லை. ஐரோப்பாவின் சுதந்திர நிலையின் காரணமாக ஏற்படும் சண்டைகளையும் தற்கொலைகளையும் பாருங்கள். அந்நிய பெண்களைப் பார்க்க வழங்கப்பட்டுள்ள அனுமதியே சில கண்ணியமான பெண்களின் அநாகரிகமான அசுத்தமான வாழ்விற்கான செயல் விளைவு ஆகும். (மல்∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 34-35; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு பர்தா எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் கூறுகின்றான். நம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறுக. அவர்களும் கூட தமது கண்களை அந்நிய ஆடவரைப் பார்ப்பதிலிருந்து பாதுகாத்து வைக்கட்டும். தமது காதுகளையும் அந்நிய குரலிலிருந்து பாதுகாத்துக் கொள்ளட்டும். அதாவது இச்சையைத் தூண்டும் அவர்களது குரலைக் கேட்காதீர்கள். தமது மறைவிடத்தை திரைக்குள் வைக்க வேண்டும். தமது அழகிய உறுப்புகளை எந்த அந்நிய ஆடவரின் முன்பும் திறக்க வேண்டாம். தமது முந்தானையைக் கொண்டு தலையை மூட வேண்டும். அதாவது, தலை, காதுகள் இவை திரைக்குள் இருக்க வேண்டும். தமது பாதங்களை நடனக்காரிகளைப் போன்று பூமியில் அடித்து நடக்கக் கூடாது. இந்த திட்டங்களை பேணி நடப்பது தடுமாற்றத்திலிருந்து காப்பாற்றக் கூடியவை ஆகும். )இஸ்லாமி உஸூல் கி ∴பிலாஸ∴பி ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 341-342)

இங்கு ஒரு விஷயத்தை தெளிவுபடுத்துகிறேன். சில பெண்கள், நாங்கள் மேக்அப் செய்துள்ளோம். முகத்தை திரையிட்டு மூடினால் எமது மேக்அப் அழிந்து விடும். எவ்வாறு பர்தா அணிவது? என்று கேள்வி கேட்கிறனர். முதலில் மேக்அப் போடா விட்டால் அந்நிலையில் பேண வேண்டிய குறைந்தபட்ச பர்தாவைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறி விட்டார்கள். முகம், உதடுகள் வெளியே தெரியலாம். மற்ற முகத்தின் பகுதிகள் மூடியிருக்க வேண்டும். மேக்அப் செய்தால் அவற்றையும் மூடியே ஆக வேண்டும். அல்லாஹ்வின் போதனையின்படி சென்றவாறு தமது அழகை மறைக்க வேண்டும். கணவருக்கு தமது அழகை காட்ட வேண்டும். அழகை வெளிப்படுத்தும் கட்டளைகள் விரிவானவையாகும். உறவினர்கள் அதாவது சகோதர சகோதரிகள் கணவர், தந்தை, மகன்கள் ஆகியவர்களிடம் பர்தாவை பேண வேண்டியதில்லை. இவர்களுக்கு முன் மேக்அப் போன்றவை வெளிப்படலாம். இவர்களைத் தவிர வேறு எவரிடமும் இல்லை. இந்த விவரத்தை இறைவன் திருக்குர்ஆனில் தந்து விட்டான். இந்த உறவினர்களின் பட்டியலை தெளிவாக கூறி விட்டான். தானே வெளிப்படுகிற அழகுகள் உள்ளன. அதாவது வடிவம், உயரம் போன்றவை. அதற்கு வீட்டில் நெருக்கமான ஜீன்ஸ், பிளவுஸ் போட்டுக் கொண்டு இவர்களுக்கு முன் அலையலாம் என்று பொருளல்ல. அனுமதிக்கப்பட்ட இவர்களுக்கு முன்னும் வெட்கமுடையோரின் உடையை அணிய வேண்டும். பர்தா அந்நிய ஆடவர் முன் அணிய வேண்டும். இன்னொரு விஷயத்தை நான் முரப்பிகள் மற்றும் அவர்களது மனைவிகளிடம் கூறுவேன். அவர்களும் தமது ஆடைகள் மற்றும் பார்வையை எச்சரிக்கையாக வைக்க வேண்டும். அவர்களது முன்மாதிரியை ஜமாஅத் பார்க்கிறது. முரப்பி மற்றும் முபல்லிக்குகளின் மனைவியும் கூட முரப்பியாக இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு விவகாரத்திலும் உயரிய முன்மாதிரியைக் காண்பிக்க வேண்டும். நமது ஆண்களையும் பெண்களையும் வெட்கத்தின் உயர் தரத்தை நிலைநாட்டுபவராகவும், நம் அனைவரையும் இஸ்லாத்தின் கட்டளைகளை பேணுபவர்களாகவும் அல்லாஹ் ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★

*(8-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

வந்துள்ளேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கருவூலம் எங்களது சான்றோரான ஹவேலா சிங் அவர்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட அமானிதப் பொருளாக பாதுகாப்பாக இருந்து வந்தது. ஹுஸூர் அவர்களுக்கு நோபல் பரிசு வழங்க வேண்டும் என்பது எனது மிகுதியான ஆசையாகும்.

10) மதிப்பிற்குரிய ∴பதஹ் சிங் பாஜ்வா அவர்கள் (பஞ்சாப் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்)

இவர்கள் தமது கருத்துக்களை தெரிவித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: நான் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஸாஹிப் அவர்களை இலண்டனில் ஒரு மாநாட்டின்போது சந்தித்தேன். அந்த மாநாடு ஒரு கடல் போன்று தோன்றியது. அஹ்மதிகளின் ஒரு நகரம் அங்கு குடியமர்த்தப்பட்டு இருக்கின்றது. ஹுஸூர் அவர்களின் பாதங்களுக்கு கீழ் அமர்ந்தவாறு நான் அந்த மாநாட்டைப் பார்த்தேன். எங்களுக்கு இந்த ஜமாஅத்துடன் மிகவும் ஆழமான தொடர்பு இருக்கின்றது. எங்களுக்க ஜமாஅத்துடன் அரசியல் ரீதியாக அல்லாமல் உள்ளம் சார்ந்த உறவு இருக்கின்றது. நான் ஐந்தாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில் சர் ஸ∴பருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்கள் காதியான் வந்தார்கள். அப்போது ஸர் ஸ∴பருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்கள் என்னிடம் மகனே! ஸ∴பர் மற்றும் ∴பதஹ் ஆகிய சொற்களுக்கு பொருள் ஒன்று தான் என்பது உனக்கு தெரியுமா? அதன் பொருள் வெற்றி என்பதாகும் என்று கூறினார்கள். அவர்கள் என்னை தனது நண்பனாக ஆக்கிக் கொண்டார்கள். நான் அவர்களுடன் கடிதத் தொடர்பு வைத்திருந்தேன். அவர்களின் துஆவின் மூலமாகவே நான் இந்த அந்தஸ்தை அடைந்துள்ளேன். *(தொடரும்...)*

## பிறப்பு

*அல்லாஹ்வின் அருளால் கடந்த 8.12.2016 அன்று மாலை 6.00 மணிக்கு எனக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது – அல்ஹம்து -லில்லாஹ். இந்தக் குழந்தை பிறப்பதற்கு முன்பே வக்ஃபே நவ் திட்டத்தின் கீழ் வக்ஃப் செய்யப்பட்டு அதற்கான அனுமதியும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடமிருந்து கிடைத்திருக்கின்றது. ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் குழந்தைக்கு* ***'ஃபாரான் அஹ்மது'*** *என்று பெயர் சூட்டியுள்ளார்கள். அல்லாஹ் எல்லா வகையிலும் எனது மகனுக்கு உலக, மார்க்க நன்மைகளை வழங்குவதற்கு ஜமாஅத் சகோதர சகோதரிகள் துஆ செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.*

*(முஅல்லிம் A. கலீல் அஹ்மது, இன்ஸ்பெக்டர் பத்ர் வார இதழ் – தமிழ் பதிப்பு)*

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

*முகத்தைப் பார்ப்பதற்கான பாக்கியம் கூட இதுவரை அதற்கு கிடைக்கவில்லை. ஆனால், இஸ்ரவேலர்களின் தொடரில் நூற்றுக்கணக்கான நபிமார்கள் வந்திருந்தனர்.*

*சுருக்கமாக, இந்த இயக்கத்தில் அப்துல் லத்தீஃப் ஷஹீது அவர்களைப் போன்ற உண்மையாளரை, இல்ஹாமை (இறை அறிவிப்பைப்) பெறுபவரை இறைவன் உருவாக்கியுள்ளான். அவர்கள் தமது உயிரைக் கூட இவ்வழியில் தியாகம் செய்து விட்டார்கள். இறைவனிடமிருந்து இல்ஹாமை பெற்று அவர்கள் என்னை உண்மைப்படுத்தினார்கள். அத்தகைய இயக்கத்தின் மீது ஆட்சேபனை செய்வது இறையச்சத்திற்கு உட்பட்ட விஷயமாக இருக்க முடியுமா ? தூய இயல்பை உடைய நல்லவரான அறிஞர் ஒருவருக்கு ஒரு பொய்யான மனிதன் மீது இந்த அளவு பேரன்புமிக்க உணர்வு ஏற்பட முடியுமா ?.............*

*சாஹிப் ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் ஷஹீது அவர்கள் தனது இரத்தத்தால் உண்மைக்கு சாட்சி பகர்ந்துள்ளார்கள்.* الاستقامت فوق الکرامت *(கொண்ட கொள்கையில் உறுதியாக நிலைத்திருப்பது அற்புதங்களை விட மேலானதாகும்). ஆனால், இன்றைய நாட்களில் பெரும்பாலான ஆலிம்களின் வழிமுறை இதுவாக இருக்கின்றது. அதாவது, ஒன்றிரண்டு ரூபாய்களுக்காக அவர்களது ஃபத்வாக்கள் (மார்க்கத் தீர்ப்புகள்) மாறி விடுகின்றன. அவர்களது பேச்சுக்கள் இறைவன் மீதுள்ள அச்சத்தினால் அல்லாமல் மனதின் எழுச்சியினால் பேசப்படுகின்றன. ஆனால், அப்துல் லத்தீஃப் ஷஹீது மர்ஹூம் அவர்கள் உண்மையாளராகவும், இறையச்சமுள்ள இறைவனின் அடியாராகவும் இருந்தார்கள். அவர்கள் இறைவனின் வழியில் தனது மனைவியையும் குழந்தைகளையும் தனது நேசத்திற்குரிய உயிரையும் பொருட்படுத்தவில்லை. இத்தகைய மக்களே உண்மையான ஆலிம்களாக இருக்கின்றனர். இவர்களது சொற்களும் செயல்களும் பின்பற்றத் தகுந்தவை ஆகும். இவர்கள் இறுதி வரை இறைவனின் வழியில் தங்களது உண்மையை நிறைவேற்றிக் காட்டி விட்டனர்.*

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 210-213)*

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 16 February 2017 Issue No. 7

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

# காதியானில் நடைபெற்ற 122 -வது ஆண்டு மாநாடு தொடர்பாக சுருக்கமான அறிக்கை

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**(இரண்டாவது பகுதி)**

## மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு

ஒவ்வோர் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்திலும் இரண்டாவது நாளின் இரண்டாவது அமர்வில் பல்வேறு மார்க்க மற்றும் அரசியல் தலைவர்கள் ஆண்டு மாநாட்டிற்கு வருகை தந்து அஹ்மதிய்யா ஜமாஅத் அமைதியை நிலைநாட்டுவதற்காக செய்கின்ற முயற்சிகள் மற்றும் ஏனைய தொண்டுகள் குறித்து தமது கருத்துக்களை தெரிவித்தனர். மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது நஸீம் கான் சாஹிப், மதிப்பிற்குரிய மவ்லவி தன்வீர் அஹ்மது காதிம் சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய மவ்லவி ஃபஸ்லுர் ரஹ்மான் பட்டி சாஹிப் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக கீழ்க்காணும் மார்க்க மற்றும் அரசியல் தலைவர்களை தமது கருத்துக்களை தெரிவிப்பதற்காக மேடைக்கு அழைத்தனர்.

1) மதிப்பிற்குரிய அனுராக் சோது அவர்கள் (கன்வீனியர் ஸத் பாவ்னா கமிட்டி, ஹோஷ்யார்பூர்)

அவர்கள் தமது கருத்துக்களை தெரிவித்தவாறு எல்லாவற்றிற்கும் முதலாவதாக மாநாட்டிற்காக தமது வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். மேலும் எப்போதும் எங்களுக்கு ஹுஸுர் அவர்களின் வழிகாட்டல் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றது என்றும் அவர்கள் கூறினார்கள். ஜமாஅத் ஹோஷ்யார்பூரில் Charitable Home Dispensary -ஐ ஆரம்பித்துள்ளது. அது மனித இனத்திற்கு தொண்டு செய்வதில் ஈடுபட்டுள்ளது என்று அவர் கூறினார். நாங்கள் ஆரம்பத்தில் இங்கு வந்த சமயத்தில் இத்தனை மதங்களைச் சார்ந்த மக்கள் இங்கு வந்ததில்லை. இப்போது அதிக எண்ணிக்கையில் இந்த மாநாட்டில் பல்வேறு சமயங்களைச் சார்ந்த மக்கள் வந்துள்ளனர் என்றும் அவர் கூறினர்.

தொடர்ந்து அவர் இவ்வாறு கூறினார்: ஹுஸுர் அவர்களுடனும் எனது சந்திப்பு இலண்டனில் நிகழ்ந்தது. அப்போது ஹுஸுர் அவர்கள் முழு உலகிலும் அமைதியை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்யாமல் இருந்தால் மூன்றாவது உலகப்போர் கண்டிப்பாக நிகழும் என்று கூறினார்கள். உங்களது மேடையின் மூலமாக எல்லா சமயங்களுக்கும் மதிப்பளிக்கப்படுகின்றது. இந்த உணர்வு முழு உலகிலும் இருந்தால் பிறகு உலகில் எந்தப் போரும் சண்டை சச்சரவுகளும் ஏற்படாது.

2) மதிப்பிற்குரிய சர்தார் ஜெர்னேல் சிங் மாஹில் அவர்கள், சேர்மன் முனிசிபல் கமிட்டி, காதியான்)

இவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்: 42 நாடுகளிலிருந்து வந்துள்ள எல்லா சகோதரர்களுக்கும் இந்த மாநாட்டிற்கான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டை ஒவ்வொரு வருடமும் மிகுந்த நேசத்துடனும் கண்ணியத்துடனும் நடத்த வேண்டும் என்று நான் துஆ செய்கின்றேன். எங்களுக்கு ஜமாஅத்துடன் மிகவும் ஆழமான தொடர்பு இருக்கின்றது. ஜமாஅத் நம் மீது எந்த அளவு நேசத்தை வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றதோ அந்த அளவு நேசத்தை வேறு எவரும் வெளிப்படுத்த முடியாது. இது உண்மையான ஜமாஅத் ஆகும்.

3) மதிப்பிற்குரிய R.K. சமன்த் ராய் அவர்கள் (Bishop North Zone, India)

அவர்கள் தமது அமைப்பின் எல்லா உறுப்பினர்கள் சார்பாகவும் சகோதர சகோதரிகளின் சார்பாகவும் மாநாட்டிற்கான வாழ்த்துக்களை தெரிவித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: எங்களுக்கு காதியானுடன் மிகவும் ஆழமான தொடர்பு இருக்கின்றது. இங்கு வரும்போதே பலரும் எனது நண்பர்களாக ஆகி விட்டனர். நாங்கள் எங்கு சென்றாலும் அங்கு நாங்கள் அஹ்மதிய்யா சமூகத்தைச் சந்திக்கின்றோம். காஷ்மீரில் எங்களது பள்ளிக்கூடம் எரிந்து விட்டது. அப்போது ஜெர்மனியிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத் அதை மீண்டும் கட்டுவதற்காக எங்களுக்கு உதவி செய்தது. இன்று முழு உலகிலும் முஸ்லிம்களை ஒவ்வொரு மோசமான நிலைமைக்கும் பொறுப்பாளி -களாக ஆக்கப்படுகின்றனர். தமது மார்க்கத்துடன் நாம் மற்றவர்களின் மார்க்கங்கள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். அவற்றை நேசிக்க வேண்டும் என்பது எனது கொள்கையாகும். நாம் எதிர்மறையான விஷயங்களை விட்டு விலகி இருந்து நேர்மறையான விஷயங்களுக்கேற்ப செயல்பட வேண்டும்.

4) ஹிமாச்சலப் பிரதேசத்திலுள்ள ஓமன் என்ற இடத்திலிருந்து வந்திருந்த மதிப்பிற்குரிய டாக்டர் சுவாமி ஆதேஷ் பூரி அவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்:

இது 122 -வது ஆண்டு மாநாடாகும். நம்மில் 122 வயதை உடைய எவரும் இங்கு இருக்க மாட்டோம். ஆனால், இந்த மாநாட்டிற்கான அடித்தளத்தை அமைத்தவர் இன்றும் உயிருடன் இருக்கின்றார். எந்த தோட்டத்தை 122 வருடங்களுக்கு முன்னர் அவர்கள் விதைத்தார்களோ அதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் நீர்ப்பாய்ச்சி இன்று இந்த செழிப்பான நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளது. மேலும் அவர்கள் தமது உரையில் எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்ற முழக்கம் எல்லாருக்கும் உரியதாகும் என்று கூறினார்கள்.

5) மதிப்பிற்குரிய கமல் ஃபிரீத் அவர்கள் (காதியான் வட்டத்திலிருந்து AAP கட்சியின் வேட்பாளராக நிற்பவர்)

இவர்கள் ஜமாஅத்திற்கு மாநாட்டிற்கான வாழ்த்துக்களை தெரிவித்தவாறு இதுபோன்ற மாநாடுகள் மூலமாக பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது வைத்துள்ள அன்பு வளர்கின்றது என்று கூறினார்கள்.

6) மதிப்பிற்குரிய மாஸ்டர் குரு கர்மா தாப்கீ அவர்கள் (நேபாளத்திலுள்ள புத்த சமூகத்தின் தலைவர்)

இவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்: நான் ஹுஸுர் அவர்களுக்கு உள்ளத்திலிருந்து ஸலாம் கூறுகின்றேன். ஹுஸுர் அவர்கள் முழு உலகிற்கும் அமைதியின் போதனையை வழங்கு -கின்றார்கள். ஹுஸுர் அவர்களின் வழிகாட்டல் மூலமாக எல்லா மதங்களுக்கிடையிலும் அன்பு உருவாகிக் கொண்டிருக்கின்றது. பாரதம் எத்தகைய ஒரு நாடு என்றால் இங்கு பல மகத்தான மனிதர்கள் பிறந்துள்ளனர். அதன் காரணமாக இங்கு அமைதி நிலைநாட்டப்பட்டிருக்கின்றது. இந்த நாட்கள் மிகவும் அருளுக்குரிய நாட்களும் அமைதியின் நாட்களுமாகும். ஹுஸுர் அவர்களுக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்க வேண்டும் என்ற தமது உள்ளத்தின் விருப்பத்தையும் அவர்கள் தெரிவித்தார்கள்.

7) மதிப்பிற்குரிய சன்த் பாபா சந்தோக்சிங் அவர்கள் (பஞ்சாபிலுள்ள கார்சேவா சந்த்தா என்ற அமைப்பின் தலைவர்)

மாநாட்டிற்கான வாழ்த்துக்களை தெரிவித்தவாறு அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய நாளாகும். இந்த மார்க்க தோற்றுனர்களின் மாநாட்டுடன் எங்களுக்கு மிகவும் தொன்மையான ஒரு தொடர்பு இருந்து வருகின்றது. குரு கோபிந்த் சிங் அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக போர் புரியவில்லை. மாறாக, அநீதிக்கு எதிராக அந்தப் போர் இருந்தது. பல முஸ்லிம்களும் அவருக்கு துணையாக நின்றனர். எங்களுக்கு எங்களது முஸ்லிம் சகோதரர்களுடன் மிகவும் பழைய தொடர்பு இருந்து வருகின்றது. இந்த அன்பு இவ்வாறே நிலைத்திருக்கவும் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் தமது நோக்கத்தில் வெற்றி பெறவும் நான் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கின்றேன்.

8) மதிப்பிற்குரிய மாஸ்டர் மோகன்லால் அவர்கள் (பஞ்சாப் அரசின் முன்னாள் அமைச்சர்)

இவர்கள் புத்தாண்டிற்கான வாழ்த்துக்களை தெரிவித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: உலகின் ஒவ்வோர் இடத்திலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இந்த உலகத்தை அழிவில் இருந்து நாம் காப்பாற்ற வேண்டும் என்றால் இயற்கை வளங்களை நாம் பாதுகாக்க வேண்டும். நாம் இந்த பூமியை வாழ்வதற்குரிய இடமாக ஆக்க வேண்டும். அதிகமாக மரங்களை நட வேண்டும். அல்லாஹ்வின் அருள்களுக்கு மதிப்பளியுங்கள். நாம் தெரிந்து கொண்டே இந்த பூமியில் விஷத்தைப் பரப்பிக் கொண்டிருக் -கின்றோம். நாம் பூமியை காப்பாற்றுவதற்கு முயற்சி செய்வோம் என்று நாம் இங்கிருந்து உறுதிமொழி எடுத்து விட்டுச் செல்வோம். அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டுவானாக!

9) மதிப்பிற்குரிய யாதோவிந்தர்சிங் படர் அவர்கள் (பாரதீய ஜனதா கட்சியின் சிறுபான்மைப் பிரிவின் தலைவர்)

இவர்கள் அனைத்து மார்க்க மற்றும் அரசியல் தலைவர்களுக்கு ஸலாம் கூறியவாறு இவ்வாறு கூறினார்கள்: எனது தந்தையாரான சர்தார் சவேலா சிங் படர் அவர்களுக்கு ஜமாஅத்துடன் பழைய தொடர்பு இருந்து வந்தது. நான் அந்த உறவைப் பேணுவதற்காக எனது முழு குடும்பத்தினருடனும் இங்கு வந்துள்ளேன். எனது பிள்ளைகளுக்கு அவர்களது மூதாதையர்களின் தொடர்பு எந்த மக்களுடன் இருந்தது என்பதை கூறுவதற்காக அவர்களை இங்கு அழைத்து

*(தொடர்ச்சி 7-வது பக்கம்....)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad